DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.53/2022
Prosecution Witness P.W.5

| | |
|---|---|
| Name : **திரு.ரணதீபன்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

**எதிரிகள் 1 முதல் 5 மற்றும்** 7, 8 **ஆஜர், 6 வது எதிரி இறப்பு.**

**நாள்: 06.10.2025.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் அணைக்கரை பட்டியில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் பழனிச்சாமி எனது தந்தை. இறந்து போன நவீன் குமார் எனது தம்பி, குள்ளப்புரத்தில் உள்ள விவசாயக் கல்லூரியில் கிளர்க்காக வேலை செய்து வந்தார். நான் அது காலேஜில் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபிஸராக வேலை செய்து வந்தேன். குதெரியும் குள்ளபுரத்தில்ள்ளபுரத்திற்கு நாங்கள் கல்லூரிக்கு சென்று வரும் வகையில் குள்ளபுரத்தைச் சேர்ந்த நேசமணி, செல்வமணி, கார்த்தி, பிரபு பாண்டி, தங்கபாண்டி, முத்துமாரி, சிவக்குமார், மனோஜ் குமார் ஆகியோர்களை தெரியும். குள்ளபுரத்தில் உள்ள அம்மாவாசை மற்றும் பரமசிவம் ஆகியோர்களுக்கு சொந்தமான கொட்டையில் எனது தம்பி நவீன் குமார் எதிரிகள் 1 முதல் 8 உடன் சேர்ந்து ஒன்றாக மது அருந்த செல்வார் என்ற விபரம் எனக்கு தெரியும். அதே போல் எங்கள் ஊரைச் சேர்ந்த அணைக்கரை பட்டியில் உள்ள சுடுகாட்டிலும் எதிரிகளுடன் ஒன்றாக சேர்ந்து எனது தம்பி நவீன் குமார் அடிக்கடி மது அருந்துவார்.

2. இந்த குள்ளப்புரத்திற்கும், அணைக்கரைப்பட்டிக்கு எவ்வளவு தூரம் அணைக்கரைப்பட்டிக்கும் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். 15.01.2021

ஆம் தேதியன்று மாட்டுப் பொங்கல் தினத்தன்று எங்கள் ஊரில் நாங்கள் சின்ன குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்திக் கொண்டிருந்தோம். அப்பொழுது இரவு 08.00 மணியளவில் விளையாட்டு போட்டிகள் முடியும் தருவாயில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கிக் கொண்டிருந்தோம். அப்போது எனது அப்பா பழனிச்சாமி எங்கள் ஊரைச் சேர்ந்த கண்ணன், சிரஞ்சீவி ஆகியோர் நின்று கொண்டிருந்தோம்.

3. இரவு சுமார் 8:30 மணி அளவில் எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரைச் சேர்ந்த டி.புதூரைச் சேர்ந்த சசிகுமார் என்பவர் பதட்டத்தில் எங்கள் நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு ஓடி வந்து எனது அப்பா பழனிச்சாமியிடம் நவீன் குமாரை குள்ளபுறத்தைச் சேர்ந்தவர்கள் கத்தியை கொண்டு குத்தி போட்டு விட்டதாக தகவல் சொன்னார். எனது அப்பா பழனிச்சாமி, நான், கண்ணன், சிரஞ்சீவி பக்கத்தில் இருந்த ஊர்காரர்கள் அனைவரும் சேர்ந்து எங்கள் ஊரில் இருந்த சுடுகாட்டிற்கு ஓடிச் சென்றோம். எங்கள் ஊரில் இருந்துஅந்த சுடுகாட்டு பகுதி என்பது சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

4. நாங்கள் ஓடிச் சென்று அங்கு பார்க்கும்பொழுது சுடுகாட்டு நிழற்குடை படிக்கட்டில் எனது தம்பி அந்த படிக்கட்டில் மல்லாக்க இடது நெஞ்சில் ஒரு குத்தும், மேல் மார்பில் ஒரு குத்தும், தலையில் பின்புறம் ஒரு காயத்துடன் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். பக்கத்தில் ஜெகதீஸ் என்பவர் இடது பக்கம் பின் தலையில் ஒரு காயத்துடனும், இடது மூக்கு மற்றும் கன்னத்தில் காயத்துடனும், சாட்சி அர்ஜுன் இடது பக்க நெஞ்சில் ஒரு காயத்துடனும் இருந்தார். எனது தம்பி பேசக்கூடிய சூழ்நிலையில் இல்லை, மயக்கத்தில் தான் இருந்தார்.

5. ஜெகதீஷ், அர்ஜுனன் ரெண்டு பேரும் பேசக்கூடிய சூழ்நிலையில் இருந்தார்கள்.எனது தம்பி ரத்த வெள்ளத்தில் இருந்ததால் அங்கு இருந்த மற்ற இருவரிடமும் என்ன நடந்தது என்று நாங்கள் கேட்காமல் எனது தம்பி நவீன் குமாரை நான் தோளில் தூக்கி போட்டுக் கொண்டு எங்கள் ஊருக்குள் எடுத்து வந்தோம். எனது தம்பிக்கு ரத்த காயம் அதிகமாக இருந்ததால் அவரை பிழைக்க

வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் எங்கள் ஊரைச் சேர்ந்த ஜே.பி என்பவரது TATA ACE வண்டியில் எனது தம்பியை போட்டு க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம்.

6. நாங்கள் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்ற பொழுது இரவு 9.15 மணி இருக்கும். மருத்துவர்கள் எனது தம்பியை பரிசோதனை செய்து பார்த்துவிட்டு வரும் வழியில் எனது தம்பி இறந்து விட்டதாக சொன்னார்கள். அவரது பிரேதத்தை பிணவறையில் வைத்து விட்டு நானும் எனது அப்பாவும் சம்பவம் எப்படி நடந்தது என்று யோசித்துக் கொண்டு வந்து கொண்டிருக்கும் போது தேனீ மருத்துவமனைக்கு சசிகுமார் வந்திருந்தார். என்ன நடந்ததென்று சசிகுமாரிடம் நாங்கள் கேட்க ஜெகதீசனும், அர்ஜுனனும் ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக் கொண்டு அவர்களையும் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அழைத்து வந்து அட்மிட் செய்திருப்பதாகவும் தகவல் சொன்னார். உடனே அவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த பகுதிக்கு நாங்கள் சுமார் 10.00 மணி போல் சென்று என்ன நடந்தது என்று நாங்கள் அவர்களிடம் விசாரணை செய்தோம்.

7. மூன்று பேரும் எங்களிடம் சம்பவம் குறித்து சொன்ன செய்திகளை சேகரித்து அன்றைய தினம் காலையில் குள்ளபுரத்தில் உள்ள அம்மாசி, பரமசிவம் என்பவரது கொட்டகைக்கு சென்று மது அருந்தி சென்றதாகவும், அங்கு குலைத்துக் கொண்டிருந்த நாயை எனது தம்பி எத்தி தூக்கி போட்டதன் காரணமாக அம்மாவாசை மற்றும் பரமசிவம் இருவரும் நாயை என் இங்கு வந்து அடிக்கிறாய் என எனது தம்பியிடம் சத்தம் போட்டு உள்ளார்கள். அப்படித்தான் அடிப்பேன் என எனது தம்பி சொன்னதன் காரணமாக அம்மாசி மற்றும் பரமசிவம் இருவரும் என் தம்பியுடன் சண்டை போட்டு உள்ளார்கள். எனது தம்பி அவர்களிடம் அப்படித்தான் தான் ஊருக்கு வருவேன், உன்னையும் அடிப்பேன், உனது கொட்டகையும் "தீ" வைப்பேன் என அவர்களை மிரட்டி வந்துள்ளார்.

8. ஜெகதீஷ் மற்றும் நவீன் குமார் இருவரும் ஒன்றாகத்தான் எப்பொழுதும் சுற்றுவார்கள் அன்றைய தினம் மாலை அணைக்கரை பட்டியில் உள்ள

சுடுகாட்டில் 06.30 –07.00 மணியளவில் மது அருந்துவதற்காக அர்ஜுனன், நவீன் குமார், மற்றும் ஜெகதீஸ் எல்லோரும் ஒன்றாக சேர்ந்துள்ளார்கள். அப்பொழுது அங்கு நேசமணி எனது தம்பிக்கு போன் போட்டு ஏன் காலையிலிருந்து தனது தாத்தாவிடம் பிரச்சனை செய்து வருகிறாய் என கேட்டுள்ளார். அப்போது நேசமணிக்கும், எனது தம்பிக்கும் வாய் தகராறு போனில் ஏற்பட்டுள்ளது. அப்போது உடன் இருந்த சசிகுமார், ஜெகதீஷ் மற்றும் அர்ஜுனன் ஆகியோர் என்ன பிரச்சனை என கேட்டபோது எனது தம்பி அவர்களிடம் காலையில் நடந்த பிரச்சனை குறித்து சொல்லி உள்ளார். ஃபோனை வைத்துவிட்டு அவர்கள் மது அருந்தி உள்ளார்கள்.

9. அவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போது கொஞ்ச நேரத்தில், இரண்டு இரு சக்கர வாகனத்தில் மொத்தம் 8 பேர் அங்கு வந்து அதில் வந்த நேசமணி எனது தம்பியிடம் பிரச்சனை செய்துள்ளார். நடந்த விபரங்களை சசிக்குமார் சொல்ல நாங்கள் தெரிந்து கொண்டோம்.நான் சசிக்குமாரிடம் நடந்த விபரங்களை கேட்டு தெரிந்து கொண்டேன் இருந்தும், சாட்சிகள் ஜெகதீஷ் மற்றும் அர்ஜுனன் இருவருக்கும் சிகிச்சை அளித்து வந்ததால் அவர்களை எங்களால் அணுகி நடந்த விபரங்கள் குறித்து பேசி சேகரிக்க இயலவில்லை. அவர்களுக்கு சிகிச்சை முடிக்கும்போது 2.00 மணி ஆனது. அப்போது அவர்களிடம் பேசி என்ன விபரங்கள் என முழுவதுமாக தெரிந்து கொண்டு நாங்கள் புகார் கொடுக்க ஆண்டிப்பட்டி காவல் நிலையத்திற்கு விடிய காலை 02.30 மணிக்கு மேல் சென்றோம்.

10. புகார் ஆண்டிப்பட்டி காவல் நிலையத்தில் வைத்து எழுதி காவல் நிலையத்தில் நான் கொடுத்தேன். எனது அப்பாவால் புகார் எழுத முடியவில்லை என்பதால் எனது சித்தப்பா சிங்கம் உடன் இருந்தார் எனது அப்பா சொல்ல சொல்ல எனது சித்தப்பா சிங்கம் புகாரை எழுதினார். எனது அப்பா கையெழுத்து போட்டு புகாரை கொடுத்தார். எனது தம்பி அன்றைய தினம் சாம்பல் நிற வேஷ்டி மற்றும் பிரவுன் நிற ஜட்டி அணிந்திருந்தார். அவை சா.பொ.1 மற்றும் 2.

காயம்பட்ட நபரையும் இறந்து போன நபரையும் போட்டோ நாங்கள் எடுக்கவில்லை, யார் ஃபோட்டோ எடுத்தது என்று எனக்கு தெரியாது.

11. நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய இறந்து போன என் தம்பி காயங்களை காட்டக்கூடிய புகைப்படங்கள் மற்றும் சாட்சி ஜெகதீஷின் காயங்களை காட்டக்கூடிய புகைப்படம் மற்றும் சம்பவ இடத்திற்கு போகும் பாதைகளை காட்டக்கூடிய புகைப்படம் ஆகியவை அ.சா.ஆ.3 மொத்தம் 6 புகைப்படங்கள் மற்றும் அதன் சி.டி, புரோபார்மாவுடன். காலையில் நாங்கள் புகார் கொடுத்துவிட்டு வீட்டுக்கு சென்றவுடன் போலீசார் வீட்டுக்கு வந்து எங்களை காலை 06.30 மணியளவில் விசாரித்தார்கள் காலையில் காவல் நிலையத்திற்கு போலீசார் வரச் சொன்னார்கள் அதன் பிறகு எனது தம்பியின் பிரேதத்தை பிரேத விசாரணை முடித்து நாங்கள் வாங்கினோம். எதிரி சிவக்குமார் தற்பொழுது நீதிமன்றத்தில் கண்கொண்டி கொண்டிருக்கிறார் அவர் சம்பவம் நடக்கும் போது ஐந்து வருடங்களுக்கு முன்பே நல்ல நிலையில் தான் இருந்தார். எனது தம்பி பயன்படுத்தி வந்த மொபைல் நம்பர். 96590 90871.

**<u>எதிரிகள் 1 முதல் 5 மற்றும் 8 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனது தம்பியை நான் தூக்கும்போது எனது உடைகளிலும் ரத்தக்கறை படிந்து இருந்தது என்றால் சரிதான். போலீசார் என்னை காலையில் விசாரிக்கும்போது எனது சட்டையில் உள்ள ரத்தக்கறை படிந்த உடைகளை நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. எனது தம்பி வெள்ளை நிற சட்டை உடுத்திருந்தார். எனது தம்பியை நான் சம்பவயிடத்தில் பார்த்தபோது அவர் சட்டை இல்லாமல் வேஷ்டி மற்றும் உள்ளாடையுடன் தான் இருந்தார். சம்பவத்திற்கு ஆறு மாதத்திற்கு முன்பு எதிரி மனோஜ் குமாருக்கும் எனது அப்பாவிற்கும் இடம் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டதால், நாங்கள் பேசிக் கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். மனோஜ் குமார் ஊரில் தனக்கு வேண்டப்பட்டவர்களை அழைத்து திருவிழா தனியாக கொண்டாட வேண்டுமென ஏற்பாடு செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. மனோஜ் குமார் ஏற்கனவே எனது தந்தை மின்சார வாரியத்தில் வேலை செய்தது சம்பந்தமாக மனு தாக்கல் செய்து அது தொடர்பாக எனது அப்பாவுக்கு பிரச்சனை வந்ததன் காரணமாக இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்து வந்தது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று இரவே மனோஜ் குமாரை போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனோஜ் குமார் எனக்கு உறவு முறையில் மாமா மைத்துனர் உறவு வேண்டும் என்றால் சரிதான். மாமா மைத்துனர் உறவு முறையில் கோயிலில் திருவிழா நடக்கும் போது அடிக்கடி எங்களுக்கிடையே பிரச்சனை ஏற்படும் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் 1 முதல் 8–க்கு மது குடிக்கும் பழக்கமே கிடையாது என்றால் சரியல்ல.

3. சம்பவ இடத்திற்கு நான் செல்லும்போது எனது தம்பியின் செல் போன் அங்கு இருந்தது என்றால் சரியல்ல. என் தம்பியின் செல்போன் இன்றைய தேதி வரை கிடைக்கவில்லை. நாங்கள் சம்பவத்திற்கு சென்றபோது எனக்கு தம்பியின் செல்போன் அங்கு இல்லை, எங்கள் தம்பி செல்போனுக்கு போட்டபோது சுவிச் ஆப் என்று தான் வந்தது. எங்கள் ஊரில் திருவிழா நடக்கும் போது ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் இருந்து இரண்டு காவலர்கள் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் திருவிழா நடக்கும் போது அனுமதி கேட்டு கடிதம் மட்டும் கொடுப்போம். சிறு பிள்ளைகளுக்காக திருவிழா என்பதால் போலீசார் பொதுவாக வரமாட்டார்கள்.

4. 15.01.2021 ஆம் தேதியன்று இரவு 7.00 மணி முதல் ஆண்டிப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து காவலர்கள் பந்தோபஸ்து பணிக்கு எங்கள் கிராமத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. பொங்கல் விழாவுக்கு மைக் செட் போட்டு இருந்தோம். மேடை போடவில்லை. மந்தையை சுத்தி பெண்கள் சுமார் 100 பேரும், ஆண்கள் சுமார் 200 பேரும் இருந்து இருப்பார்கள். இந்த வழக்கில் எனது சகோதரரை குத்திய நபர்களை ஊர்க்காரர்கள் பிடித்து அன்றைய தினமே காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல.

5. நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் செல்லும்போது அங்கு காவல் நிலையத்தில் எதிரிகள் யாரும் இல்லை என சாட்சி தன்னிச்சையாக குறிப்பிடுகிறார்.சம்பவ தினத்தன்று TN 05 Z 373 என்ற ஹீரோ ஹோண்டா ஸ்ப்லெண்டர் பைக் ஊரில் கிடந்தது என்றால் சரியல்ல. அந்த பைக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. குள்ளிபுரம் சுடுகாடு மற்றும் அணைக்கரைப்பட்டி சுடுகாட்டில் எனது தம்பியும் அவரது நண்பர்களும் எதிரிகளும் உடன் சேர்ந்து குடிப்பார்கள் என கூறுவது பொய் என்றால் சரியல்ல. குள்ளபுரத்தில் சுடுகாடு கிடையாது. அம்மாவாசை மற்றும் பரமசிவத்தின் கொட்டகை தான் உள்ளது. அமாவாசை மற்றும் பரமசிவம் ஆகியோர்களது கொட்டகையில் ஒருபொழுதும் எனது தம்பி சென்று குடித்ததில்லை என்றால் சரியல்ல, எனது கல்லூரிக்கு நானும், எனது தம்பியும் தனித்தனி வண்டியில் செல்வோம்.

6. எனது தம்பி போகும் பொழுது 15 நிமிடம் காலதாமதத்துடன் தான் வருவார். நான் காலதாமத்துமாக வருவதற்கு நான் விசாரித்தபோது அவர் கொட்டகையில் மது அருந்தும் விவரம் தெரிந்து கொண்டேன் க.விலக்குஅரசு மருத்துவமனைக்கு நாங்கள் சென்றபோது போலீசார் அங்கு வந்து எங்களை வழக்கு தொடர்பாக விசாரித்தார்களா என்றால் போலீசார் அங்கு வரவே இல்லை. காலதாமதமாக புகார் கொடுத்ததை மறைப்பதற்காக அர்ஜுனன் மற்றும் ஜெகதீசன் பார்த்து விசாரிப்பதில் மருத்துவமனையில் காலதாமதம் ஏற்பட்டதாக தற்பொழுது வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

7. ஜெகதீசன் மற்றும் அர்ஜுனன் இருவரும் ரத்த காயத்துடன் இருந்ததால் அவர்களை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். மருத்துவர்கள் அவர்களை பரிசோதனை செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதால் தான் நான் அதன் பிறகு தான் அவர்களை விசாரித்துவிட்டு புகார் தெரிவிக்க சென்றோம். ஜெகதீசன் மற்றும் அர்ஜுனன் இருவரையும் போலீசார் க.விலக்கு அரசு மருத்துவமனையில் வந்து அன்றைய தினம் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. எனது தம்பி இறப்பிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மனோஜ் குமார் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக அவர்கள்

நண்பர்களையும் இந்த வழக்கில் சேர்த்து பின்னிட்டு ஆலோசனையின் பேரில் இந்த புகார் தருவிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

8. நானும், மனோஜ்குமாரும் 6 மாதத்திற்கு முன்பு மனஸ்தாபம் இருந்தாலும் இருவரும் தொடர்ந்து பேசிக் கொண்டுதான் இருந்தோம், எனக்கு அவர் மீது எந்த முற்பகையும் கிடையாது. சம்பவத்திற்கு மறுநாள் ஆண்டிப்பட்டி காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள பேருந்து நிறுத்தம் முன்பு எம்.எல்.ஏ தலைமையில் நாங்கள் நடவடிக்கை எடுக்கக்கோரி மறியலில் ஈடுபட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு மறியல் எதுவும் எனக்கு தெரிந்த வகையில் நடைபெறவில்லை. நான் எதிரிகளுக்கு எதிராக வேண்டுமென்றே பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகள் ஜெகதீஷ் மற்றும் அர்ஜூனன் இருவரும் சுயநினைவுடன் தான் சம்பவத்தை குறித்து சொல்லும் நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

9. போலீசார் என்னை விசாரிக்கும் போது எனது தம்பி கடைசியாக பயன்படுத்தி வந்த செல்போன் எண்ணை குறித்து நான் சொல்லியுள்ளேன்.

**<u>7 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேற்கண்ட குறுக்கு விசாரணையை தனது குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2025.10.06 18:18:38 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.